Registered as a Newspaper

பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

நல்லூர் கிளை நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 04 (19-12-93) ஞாயிற்றுக்கிழமை ஓசை 304

## நிவாரண நிறுத்தத்தைக் கண்டித்து கட்டடத் தொழிலாளர் ஊர்வலம்

யாழ். மாவட்ட சீமெந்துகட்டடத் தொழிலாளருக்கு வழங்கப்பட்டுவந்த நிவாரணம் இடைநிறுத்தப்பட்டதைக் கண்டித்து மீசாலையில் எதிர்வரும் புதன்கிழமை அமைதி ஊர்வலம் ஒன்று நடாத்தப்படவுள்ளது. இடைநிறுத்தப்பட்ட நிவாரணத்தை மீண்டும் தொடரும்படியும் அல்லது அரசாங்கத்திடமிருந்து மூலப்பொருள்களைப் பெற்று வழங்குவதன் மூலம் கட்டடத் தொழிலாளருக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுத் தரும்படியும் தென்மராட்சி உதவி அரசாங்கஅதிபரிடம் ஒரு மகஜர் கையளிக்கப்படவுள்ளது. இவ் ஊர்வலம் மீசாலைச் சந்தியிலிருந்து காலை9.00 (4ஆம் பக்கம் பார்க்க)

# முப்படைத் தளபதிகள் கிறிஸ்தவராகையால் சிறிலங்காவில் புதிய சிக்கல் தோன்றலாம்!

## தோல்விகளுக்கு மதம் குற்றம் சாட்டப்படலாம்

(கொழும்பு)

இராணுவத் தளபதியாக ஜெரி டி சில்வா பொறுப்பேற்க இருப்பதை அடுத்து சிறிலங்காவின் முப்படைத் தளபதிகளும், பொலிஸ் மா அதிபரும் கிறிஸ்தவ மதத்தினர் என்ற நிலையை உருவாக்கியுள்ளது. பௌத்த சிங்கள பேரினவாத கோட்பாட்டைக் கைக்கொள்ளும் சிறிலங்கா அரசியலில் இது புதிய பல சிக்கல்களை உருவாக்கலாம் என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட பி. பி. ஸி

சிறிலங்காவின் புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்படும் ஜெரிடிசில்வா ஒரு கிறிஸ்தவர். இவரின் நியமனத்துடன் சிறிலங்காவின் இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் என அனைத்துப் படைகளின் தலைவர்களும் இப்போது கிறிஸ்தவர்கள் என்ற நிலை பெரும்பான்மை பௌத்த நாட்டில் தோன்றியுள்ளது.

ஜெரி டி சில்வாவின் நியமனம் இராணுவத் தளபதிகளிடையே இருந்த சச்சரவை குறைக்குமாயினும் முக்கிய பிரச்சினையான புலிகளின் பிரச்சினை அப்படியேதான் உள்ளது பிரிட்டன், இந்தியா, பாகிஸ்தான் நாடுகளில் பயிற்சி பெற்ற இவர், சுமார் 10ஆயிரம் பேரளவில் இருக்கும் தமிழ் போராளிகளுடன் கடந்த 10ஆண்டுகளாக போரிடும் 70ஆயிரம் இராணுவத்தினரை வழிநடத்தவுள்ளார்.

இராணுவம் சந்தித்த பின்னடைவுகள், தொடரும் முடிவில்லாப் போரும், அதற்கான குறைந்த வசதிகளும் படையினரின் ஒழுங்கு கட்டுப்பாட்டை தளர்த்தி விட்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாடெங்கும் பெருமழை; பல பகுதிகள் வெள்ளக் காடாகக் காட்சி!

### ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளைவிட்டு வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் குறு... கணக்கான குடும்பங்கள் ... ம்பி வழிந்துகொண்டிருக்கி... மேலும் பல வீதிகளின் ...

## தோல்வியை வெற்றியாகக்காட்டும் சிறிலங்கா இராணுவத்தின் விநோதம்!

### 'கவுண்டர் பொயின்ற்' சஞ்சிகை விசனம்

சிறிலங்கா இராணுவம் ஒரு விசித்திரமான தர்க்கத்தைப் பாவிக்கிறது. இது தோல்வியை வெற்றியாக எடுத்துக்கொள்கிறது. தோல்வியை வெற்றியாகக் கருதும் போது அதற்கு ஏற்றாற் போல் ஒரு வீரனும் தேவைப்படுகிறது. அதனால் தான் பூநகரி யுத்தத்தின் போது இராணுவ தந்திரோபாயத்தில் தவறிழைத்த லெப். கேணல் சில்வாவுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது, இந்தப் பதவி உயர்வு குறித்து இராணுவ மட்டத்தில் அதிருப்திநிலவுவதாகவும், இந்தப் பதவி உயர்வு இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரெட்னாவால் வழங்கப்பட்டதாகவும் கவுண்டர் பொயின்ற் சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

அந்தச் சஞ்சிகையில், பூநகரி கற்பித்த பாடங்கள் என்ற தலைப்பில் வர்ணா கருணாதிலக்கா எழுதுகையில்

வெலிஓயா, யாழ்தேவி நடவடிக்கைகளில் பாடம் படிக்கத் தவறிய இராணுவம் பூநகரித் தாக்குதலிலிருந்து எப்படிப்பாடம் படிக்கப் போகிறது என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. இரண்டாவது ஈழம் யுத்தத்தில் நான்கு இராணுவ முகாம்கள் வட பகுதியில் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வங்காள விரிகுடாவில் தாழமுக்க மையம்!

### புயலாக உருவாகலாம்

(கொழும்பு)

வங்காள விரிகுடாவின் தெற்கே உருவான தாழமுக்கம் நேற்று பிற்பகல் 4.00 மணியளவில் இலங்கையின் தென்கிழக்கு கரையிலிருந்து கிழக்கே 400 கிலோமீற்றர் தொலைவில் நிலைகொண்டிருந்தது. அது மேலும் தீவிரமாகி கிழக்கு கரையோரத்திற்கு அண்மையாக வடமேற்கு பக்கமாக நகர்ந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழருக்கு மேலதிகமாக எதையும்

யிட்ட பி. பி. ஸி

சிறிலங்காவின் புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்படும் ஜெரிடிசில்வா ஒரு கிறிஸ்தவர். இவரின் நியமனத்துடன் சிறிலங்காவின் இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் தலைவர்களும் இப்போது கிறிஸ்தவர்கள் என்ற நிலை பெரும்பான்மை பௌத்த நாட்டில் தோன்றியுள்ளது.

ஜெரிடிசில்வாவின் நியமனம் இராணுவத் தளபதிகளிடையே இருந்த சச்சரவை குறைக்குமாயினும் முக்கிய பிரச்சினை அப்படியேதான் உள்ளது பிரிட்டன், இந்தியா, பாகிஸ்தான் நாடுகளில் பயிற்சி பெற்ற இவர், சுமார் 10ஆயிரம் பேரளவில் இருக்கும் தமிழ் போராளிகளுடன் கடந்த 10ஆண்டுகளாக போரிடும் 70ஆயிரம் இராணு

இராணுவம் சந்தித்த பின்னடைவுகள், தொடரும் முடிவில்லாப் போரும், அதற்கான குறைந்த வசதிகளும் படையினரின் ஒழுங்கு கட்டுப்பாட்டை தளர்த்தி விட்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

வியை வெற்றியாகக் கருதும் போது அதற்கு ஏற்றாற் போல் ஒரு வீரனும் தேவைப்படுகிறது. அதனால் தான் பூநகரி யுத்தத்தின் போது இராணுவ தந்திரோபாயத்தில் தவறிழைத்த லெப். கேணல் சில்வாவுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது, இந்தப் பதவி உயர்வு குறித்து இராணுவ மட்டத்தில் அதிருப்திநிலவுவதாகவும், இந்தப் பதவி உயர்வு இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரெட்னாவால் வழங்கப்பட்டதாகவும் கவுண்டர் பொயின்ற் சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

வடிக்கைகளில் பாடம் படிக்கத் தவறிய இராணுவம் பூநகரித் தாக்குதலிலிருந்து எப்

பகுதியில் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வங்காள விரிகுடாவில் தாழமுக்க மையம்!

### புயலாக உருவாகலாம்

(கொழும்பு)

வங்காள விரிகுடாவின் தெற்கே உருவான தாழமுக்கம் நேற்று பிற்பகல் 4.00 மணியளவில் இலங்கையின் தென்கிழக்கு கரையிலிருந்து கிழக்கே 400 கிலோமீற்றர் தொலைவில் நிலைகொண்டிருந்தது. அது மேலும் தீவிரமாகி கிழக்கு கரையோரத்திற்கு அண்மையாக வடமேற்கு பக்கமாக நகர்ந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். குடாநாடெங்கும் பெருமழை; பல பகுதிகள் வெள்ளக் காடாகக்காட்சி!

## ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளைவிட்டு வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் குறுகிய நேர இடைவெளியில் பெய்த கடும் மழை காரணமாக குடாநாடெங்கும் பெரும் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது.

யாழ். நகரப்பகுதி உட்பட அனைத்துப்பகுதிகளிலும் ஏற்பட்டிருக்கும் பெரும் வெள்ளம் காரணமாக ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன பொதுமக்களின் குடியிருப்புக்களுக்குள் மட்டுமன்றி அரச தனியார்அலுவலகங்கள்பாடசாலைகள் ஆகியவற்றிற்குள்ளும் மழைவெள்ளம் நேற்றுப் புகுந்துகொண்டது.

குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள குளங்கள் அனைத்தும் நீரால் நிரம்பி வழிந்துகொண்டிருக்கின்றன. பெரும்பாலான வீதிகளினூடாக வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது சில வீதிகளில் நீர் தேங்கிப்போய் உள்ளது.

வெள்ளம் காரணமாக குடாநாட்டின் பல்வேறு வீதிகளினூடான போக்குவரத்துக்கள் முற்றாகத் துண்டிக்கப்பட்டன.

மேலும் பல வீதிகளின் ஊடாக பெரும் சிரமத்தின் மத்தியில் மக்கள் போக்குவரத்துச்செய்தனர். அரச, தனியார் அலுவலகங்கள், மற்றும் கல்விக்கூடங்கள் பலவும் நேற்றையதினம் செயலிழந்தன.

நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று பிற்பகல் வரையான குறுகிய கால இடைவெளியில் மட்டும் சுமார் 232 மில்லிமீற்றருக்கு மேற்பட்ட மழைவீழ்ச்சி இருந்ததாக குடாநாட்டில் எடுக்கப்பட்ட கணிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

இக்கடும் மழை காரணமாக யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மட்டும் சுமார் 420இற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சியில் வெள்ளப்பெருக்கால் கிராமங்கள் பல துண்டிப்பு

## இரணைமடுக் குளம் திறந்துவிடப்பட்டது

(கிளிநொச்சி)

வன்னிப்பகுதியில் முல்லைத்தீவு, மன்னார், வவுனியாப் பகுதியில் நேற்று பெய்த கடும் மழையினால் பல குளங்கள் நிரம்பியுள்ளன. வீதிகள் சில நீரில் மூழ்கியுள்ளன வயல் நிலங்களும் நீரில் அமிழ்ந்துள்ளன. பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இரணைமடு குளத்தின் நீர் மட்டம் 34 அடிக்கும் மேல் உயர்ந்ததையடுத்து அதிலிருந்து நீரை வெளியேற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும் நீர் மட்டம் குறைவடையவில்லை. திருநகர், பாரதிபுரம் குளங்கள் உடைப்பெடுக்கும் நிலையில் உள்ளன. வெள்ளம் காரணமாகமுரசுமோட்டை, ஊரியான், பாரதிபுரம்ஆகிய பகுதிகளில் உள்ளவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். வெள்ளம் ஏற்படக்கூடிய இடங்களிலிருந்து மக்களை வெளியேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பெருக்கெடுத் தோடும் வெள்ளத்தினால் கால்நடைகள் பல அடித்துச் செல்லப்பட்டுள்ளன. மேலும் சில கிராமங்கள் வெள்ளத்தினால் பிரதான நகரங்களுடான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. சரியான சேத விபரம் தெரியவரவில்லையாயினும் பெரும் அழிவுகள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறதுநேற்று அதிகாலை முதல் தொடர்ச்சியான மழை பெய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மன்னார், முல்லைத்தீவு பகுதிகளிலும் பெருமழை பெய்துவருகிறது.

## வழமைக்கு மாறான பெருமழை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளிக் கிழமை காலை முதல் நேற்று பிற்பகல் 5.00 மணிவரையும் 236 மில்லி லீற்றர் (9 அங்குலத்துக்கு மேல்)மழைவீழ்ச்சி பெறப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறையினர் தெரிவிக்கின்றனர். டிசம்பர் மாதத்தில் இவ்வாறு நாளுக்குரிய மழை வீழ்ச்சி மிக நீண்டகாலமாக பெறப்படவில்லை இது வழக்கத்துக்கு மாறானதாகும்.

வங்காள விரிகுடா அமுக்க இறக்கத்தினாலேயே இம் மழை பெறப்பட்டுள்ளது. இவ் அமுக்கம் சூறாவளியாக மாற்றமடையுமாயின் வெள்ளத்தால் நிரம்பியுள்ள யாழ் பிரதேசம் பெரும் அழிவுகளைச் சந்திக்கும் என புவியியற் துறையினர் மேலும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 மணி நேரத்தில் 173 . 7 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டு. மாவட்டத்தில் 20,000குடும்பங்கள் பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்த கடும்மழையினால் 20ஆயிரம் குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன, 8ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன. வெல்லாவெளி, வாழைச்சேனை, ஏறாவூர், செங்கலடி ஆகிய இடங்கள் வெள்ளத்தினால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள பல ஆறுகள் பெருக்கெடுத்துள்ளன,

# தமிழருக்கு மேலதிகமாக எதையும் வழங்க நான் தயாரில்லை! டி. பி. விஜேதுங்க

(கொழும்பு)

''வடக்கு கிழக்கு மாகாணங்களை பிரிக்காது தற்போதைய பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது இந்தப் பிரச்சினை வடமாகாணத்திற்கு மாத்திரம் என்ற அடிப்படையில் தீர்த்து வைக்கப்படும்'' இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார். நேற்று கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற ஆளும் ஐ. தே. கவின் 39 ஆவது வருடாந்த மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு தலைமை வகித்து ஜனாதிபதி விஜேதுங்க பேசினார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்; வடக்குகிழக்கு மக்களுக்கு எந்தவித மேலதிக சலுகைகளையும்வழங்க நான் தயாரில்லை. ஏனைய பகுதி மக்களுக்கு வழங்கப்படும் வசதிகளே அவர்களுக்கும் வழங்கப்படும். 'பயங்கரவாதம்' நாட்டிலிருந்து முற்றாக அழிக்கப்படவேண்டும். அரசு இக்குறிக்கோளை அடைய உறுதி பூண்டுள்ளது. வடக்கு கிழக்கு பிரச்சினை இனப்பிரச்சினை அல்ல. அது ஒரு'பயங்கரவாத' பிரச்சினை மாத்திரமே. வடக்கு கிழக்கு பகுதிக்கு சம்பளம் ஓய்வூதியம் வழங்க அரசு பெருமளவு பணம் ஒதுக்குகின்றது. கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல் நடத்த அரசு முடிவு செய்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளராக டி. பி. விஜேதுங்கவை நியமிப்பது என்ற தீர்மானம் கட்சியின்வருடாந்த மாநாட்டில்ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### — மத்திய மாகாண சபை விவகாரம் —

# இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு கொலைமிரட்டல்

## தமிழருக்கெதிராக இனவாத சுவரொட்டிகள்

(கொழும்பு)

மத்திய மாகாண சபையில் நாளை மறுதினம் மாகாண முதலமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட உள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிப்பது என இ. தொ. கா தீர்மானித்துள்ளதை அடுத்து அக் கட்சியின் மாகாணசபை உறுப்பினர்களுக்கு தொலைபேசி மூலம் கொலைமிரட்டல்கள் விடப்பட்டுள்ளன. மேலும் மத்திய மாகாணத்தின் பல பகுதிகளிலும் தமிழர்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டக்கூடிய விதத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சிறிலங்கா அரசாங்கத்திடம் முன்வைத்துள்ள கோரிக்கைகள், விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டவை என்றும் இ. தொ. கா மூலம் மறைமுகமாக விடுதலைப்புலிகள் செயற்பட்டு வருகின்றனர் என்றும் சுவரொட்டிகள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தென் மாகாணசபையை தன்வசப்படுத்துவதற்காக மாகாணசபைஉறுப்பினர் ஒருவரை கடத்திச் சென்றுள்ளதன் மூலம் அரசாங்கம் தனது முயற்சியில் வெற்றி பெற்று விட்டது என 'ராவய' பத்திரிகை ஆசிரியர்

(.4 ஆம் பக்கம் பார்க்க )

# மாகாணசபைகள் அனைத்தையும் கைப்பற்ற ஐ. தே. க. முயற்சி!

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் ஆட்சியில் இருக்கும் அனைத்து மாகாணசபைகளையும் கைப்பற்றுவதற்காக சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க சகல முயற்சிகளையும் தீவிரமாக மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினரை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைத்துக் கொள்வதற்கான முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளார் என அறிய வருகின்றது.

ஆரம்பத்தில் இதனை எதிர்த்து வந்த ரணில் விக்கிரமசிங்க இம் முயற்சிக்கு அதரவு அளித்துவருவதாகவும், இ. தொ. கா. எதிரணியினருடன் இணைந்துகொண்டாலும்கூட தமக்கு தோல்வி ஏற்படக்கூடாது என்பதற்காகவேஇவ்வாறான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறு ஜனநாயக ஐக்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### வாழ்த்துகிறோம்

எமது கல்வி நிலையத்தில் கல்வி பயின்று ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைப் பாராட்டுகிறோம், வாழ்த்துகின்றோம், பரிசில் வழங்கும் வைபவம் நடைபெறவுள்ளதால் சித்தி பெற்ற எமது மணவர்கள் பெயர்களை பதிவு செய்யவும் புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (6920)

### விற்பனைக்கு

பொம்மேரியன் இரண்டு மாதம் குட்டிகள் விற்பனைக்கு உண்டு ஆர். எஸ் கே. பாம் முருகபதி. உடுவில், சுன்னாகம். R S.K FARM Murugapathy, Uduvil Chunnakam. (6898)

### வீடு விற்பனைக்கு

நீர்வேலி. பருத்தித்துறை பிரதான வீதியில் 4 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி வ கார்த்திகேசபிள்ளை 6-வதுமைல் கட்டை நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (6900)

### தேவை

பஞ்சமிட்டாஸ், ஐஸ்பழவகைகளை துவிச்சக்கரவண்டி, தள்ளுவண்டி மூலம்விற்பனை செய்யக்கூடியவர்கள் உடன் தேவை: வானவில் குளிர்பான நிலையம், ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம். (சி-8139)

### உடன் விற்பனைக்குண்டு

பிறிமா-லோமன் 5 நாள் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஓடர்களுக்கு புரோயிலர், சேவல், வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், கோல்டன்கொமட் குஞ்சுகள் பெற்றுக்கொள்ளலாம் தொடர்பு மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (6913)

### வெற்றுப்போத்தல்கள் தேவை

வெற்றுப் போன்விட்டா, மாமைட், வீவா ஹர்லிக்ஸ் போத்தல்கள் மூடியுடனும், ஜாம், புரோடினேக்ஸ், பியர், ...

# அடுத்தவருட முற்பகுதியில் கூட்டுறவுபரிசோதகர்பரீட்சை

(நமது நிருபர்)

யாழ். மாவட்டத்தில் இறுதி நேரத்தில் நடைபெறாமல்போன கூட்டுறவு பரிசோதகர் பதவிக்கான போட்டிப் பரீட்சை அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறுமென அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேரம் கடந்த பின்னர் வந்தமையால் அன்றையதினம் பரீட்சை நடைபெறாமல் போனது தெரிந்ததே.

இதேவேளை பலருக்கு அனுமதி அட்டைகளும் கிடைக்காமல் போனதும் குறிப்பிடத்தக்கது. இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்களை அனுப்பியவர்களில் தகைமை உள்ளவர்களுக்கும் விண்ணப்ப திகதிக்கு பிந்தி விண்ணப்பங்களை அனுப்பியோரில் தகைமை உடையவர்களும் இப் பரீட்சை எடுப்பதற்கு அனுமதிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (சி), (க)

### விண்ணப்பிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். கில்னர் ஒழுங்கையில் இயங்கி வரும் புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலயத்தில் 1994 கல்வி ஆண்டின் முதலாம் ஆண்டு அனுமதிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம் மாதம் 28ஆம் திகதி என்றும், 2ஆம், 3ஆம், 4ஆம் 5ஆம் ஆண்டுகளிலும் வெற்றிடங்கள் உண்டென்றும், விண்ணப்பங்களை நேரில் சமர்ப்பிக்குமாறும் மேற்படி வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (22)

❖

யாழ். கில்னர் ஒழுங்கையில் இயங்கிவரும் வீரவேங்கை சிவமூர்த்தி நினைவு பாலர் பாடசாலையில் 1994 ஆம் ஆண்டு அனுமதிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம் மாதம் 28ஆம் திகதி என்றும், விண்ணப்பதாரிகள் 1994ஆம் ஆண்டு தைமாதம் 31ஆம் திகதி நான்கு வயது பூர்த்தியடைந்திருந்தவராய் இருத்தல் வேண்டும் என்றும், இடம்பெயர்ந்தோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், விண்ணப்பங்களை நேரில் சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (22)

### லட்சார்ச்சனையும் கணபதி ஹோமமும்

விநாயகர் விரதத்தின் நிறைவை முன்னிட்டு கலட்டி சிறிகற்பக விநாயகர் ஆலயத்தில், இன்று பிற்பகல் நான்கு மணியளவில் லட்சார்ச்சனையும், விசேட கணபதி ஹோமமும் நடைபெறவுள்ளது. தேவஸ்தான பிரதமகுரு மகாகணபதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் பிரபலசிவாச்சாரியார்கள்பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# விவசாயபயிற்சிவகுப்புக்கள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், விவசாய திணைக்களமும் இணைந்து நடாத்தும், விவசாய பயிற்சி வகுப்புக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இப் பயிற்சி வகுப்புக்களில் நடைமுறை விவசாய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பற்றிய விளக்கமளிக்கப்படுவதுடன், பயிரிடுதல், பயிர் பாதுகாப்பு பற்றிய நவீன தொழில் நுட்ப விபரங்களும் வழங்கப்படுகின்றன.

கீழ்வரும் அட்டவணைப்படி நடைபெறும் இப்பயிற்சி வகுப்புக்களில் அனைத்து விவசாயிகளும் பங்குபற்றி பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| திகதி | பிரிவு | இடம் | நேரம் |
|---|---|---|---|
| 21-12-93 | சாவகச்சேரி | எழுதுமட்டுவாள் தெற்கு, சந்தையடி வாசிகசாலை. | 10 00 மணி |
| 21-12-93 | உரும்பராய் | கோப்பாய் நாவலர் பாடசாலை | 10.00 மணி |
| 23-12-93 | நல்லூர் | கோண்டாவில் சனசமூக நிலையம் | 10.00 மணி |
| 23-12-93 | புத்தூர் | புத்தூர் கமநலசேவை நிலையம் | 10:00 மணி |

## வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

### ஆண்டு 6 அநுமதி 1994

1993ஆம் ஆண்டின் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு எமது கல்லூரியில் ஆண்டு 6இல் அநுமதி வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை எமது கல்லூரி அலுவலகத்தில் 23-12-93 ற்கு முன் ஒப்படைக்கவும், புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அதிபர்

(சி-8168)

புங்குடுதீவு—நயினாதீவு பல. நோ. கூ. சங்கம் (வ—து.)

சகல பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கும்

## விசேட பொதுக்கூட்ட நிகழ்ச்சி நிரல்

கிளைக்குழுத் தெரிவின்பின் நடைபெறும் முதலாவது பொதுச்சபைக் கூட்டம்

காலம்: 30-12-1993-ம் திகதி வியாழக் கிழமை முற்பகல் 9 30மணிக்கு

இடம்: யாழ் / புனித மரியாள் வித்தியாலயம் (ஓ. எல். ஆர்.)

சங்கத் தலைமைக் காரியாலயத்திற்கு அருகாமையில்.

தலைவர்: திரு.ப.கனகலிங்கம் அவர்கள்

01. இறை வணக்கம்
02. தலைவர் உரை
03. நிர்வாக அறிக்கை சமர்ப்பித்தல்
04. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உரை.
05. பணிப்பாளர் சபைஉறுப்பினர்தெரிவு
06. நன்றியுரை

தவறாது சமுகந்தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

செயலாளர்
புங்—நயி பல நோ. கூ. சங்கம்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: இக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல்கள் கிடைக்கப் பெறாதவர்கள் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

16-12-1993. (சி-8155)

# உலகில் எங்குமில்லாதவை இங்கு நடைமுறையாகிறது

-பந்துல குணவர்த்தனா

(கொழும்பு)

இங்கு முப்பத்தெட்டு வகையான ஆசிரியர்கள் சேவையில் உள்ளனர் ஒன்பது விதமான சம்பளத் திட்டங்களும் உள்ளன உலகில் வேறு எங்குமே இவ்விதம் கிடையாது. இவ்வாறு கல்வி, உயர்கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் பந்துல குணவர்த்தனா தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், அரசியல் தலையீடின்றி பதவி உயர்வுபெற வேண்டுமானால் ஆசிரியர்கள் 42 வருடங்கள் காத்திருக்க வேண்டும் எனவும், பிறந்த உடனேயே நியமனம் கிடைத்தால் மட்டுமே இது சாத்தியம் எனவும் சுட்டிக் காட்டினார்.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தமிழீழ மண்ணில் 03-09-1970

தமிழ்த்துரோகியர் சதியில் 19-12-1989

திதி:- 05 01 1994

### நாகராஜா சூரியபாலன்

19-ம் திகதி இரவு டிசம்பர் வரும்போது பாரத இராணுவ பாதங் கழுவியோர் -- உன்னைப் படுகொலை செய்த பயங்கர நினைவெழும். 19 வயதை நீ அடைந்தது பாவமா -- இல்லை விடுதலைப் போருக்கு நீ காட்டிய வேகமா.

'வாழ்க' பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள்.
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (6899)

## நினைவு கூருகின்றோம்..

### 1993-12-19

1987ஆம் ஆண்டு இதே தினத்தில், ஆவரங்கால் அம்மன் கோவிலடிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் விழுப்புண் அடைந்த நிலையில் தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய,

**அருணன்** (வீரச்சாமி அருளம்பலம் தேவதாஸ்-நீர்வேலி மத்தி-யாழ்)

1988ஆம் ஆண்டு கொடிகாமம் கச்சாய்ப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய,

**அலெக்ஸ்** (சின்னத்துரைகுலசேகரம்-கச்சாய்தெற்கு கொடிகாமம்)

மன்னாரில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கள்ளிக்கட்டைக் காட்டைச் சேர்ந்த 02 தமிழர்கள்.

யாழ்-சுழிபுரத்தில் இந்தியப்படையினரால் சுட்...

நிலையம், ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம். (சி-8139)

## உடன் விற்பனைக்குண்டு

பிறிமா-லோமன் 5 நாள் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஓடர்களுக்கு புரோயிலர், சேவல், வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், கோல்டன்கொமட் குஞ்சுகள் பெற்றுக்கொள்ளலாம் தொடர்பு மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (6913)

## வெற்றுப்போத்தல்கள் தேவை

வெற்றுப் போன்விட்டா, மாமைட், வீவா ஹார்லிக்ஸ் போத்தல்கள் மூடியுடனும், ஜாம், புரோடினேக்ஸ், பியர், சோடியல் போத்தல்கள் மூடியில்லாமலும் எம்மால்கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட். 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்

(சி-8054)

## விவசாயபயிற்சிவகுப்புக்கள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், விவசாய திணைக்களமும் இணைந்து நடாத்தும், விவசாய பயிற்சி வகுப்புக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இப் பயிற்சி வகுப்புக்களில் நடைமுறை விவசாய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பற்றிய விளக்கமளிக்கப்படுவதுடன், பயிரிடுதல், பயிர் பாதுகாப்பு பற்றிய நவீன தொழில் நுட்ப விபரங்களும் வழங்கப்படுகின்றன.

கீழ்வரும் அட்டவணைப்படி நடைபெறும் இப்பயிற்சி வகுப்புக்களில் அனைத்து விவசாயிகளும் பங்குபற்றி பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| திகதி | பிரிவு | இடம் | நேரம் |
|---|---|---|---|
| 21-12-93 | சாவகச்சேரி | எழுதுமட்டுவாள் தெற்கு, சந்தையடி வாசிகசாலை. | 10 00 மணி |
| 21-12-93 | உரும்பராய் | கோப்பாய் நாவலர் பாடசாலை | 10.00 மணி |
| 23-12-93 | நல்லூர் | கோண்டாவில் சனசமூக நிலையம் | 10.00 மணி |
| 23-12-93 | புத்தூர் | புத்தூர் கமநலசேவை நிலையம் | 10:00 மணி |
| 30-12-93 | உடுவில் | இணுவில் கிராம முன்னேற்றச் சங்க மண்டபம் | 10.00 மணி |
| 31-12-93 | தொல்புரம் | அராலி மேற்கு சனசமூக நிலையம் | 10.00 மணி |
| 31-12-93 | அம்பன் | குடத்தனை சனசமூக நிலையம் | 10.00 மணி |


## நத்தார், புதுவருட சேவையில் "வானவில்"

தரம், சுவை, சுத்தம் நிறைந்த
குளிர்களி, குளிர்பான,
சிற்றுண்டி வகைகளுக்கு
"வானவில்" குளிர்பான நிலையம்

- சிற்றுண்டி வகைகளை எந்நேரத்திலும் சுடச்சுட சுவைத்து மகிழ
- சுவை நயம் மிக்க சகலவித குளிர்களி, குளிர்பான வகைகளையும் பருகிச் சுவைக்க
- தரமான பாண், பஞ்சுமிட்டாஸ், பால்மா வகை. பிஸ்கற் வகைகளை நியாயவிலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

"வானவில்' குளிர்பான நிலையம்
மறவாதீர்கள்!

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

**20-12 93 முதல் 31 12-93 வரை**

குளிர்களி, குளிர்பான வகைகளுக்கு
25 வீத விலைக்கழிவு உண்டு

குறைந்த விலையில் நிறைந்த சுவைகாண மறவாமல் நாடுங்கள்

# வானவில் குளிர்பான நிலையம்,

ஆரியகுளம் சந்தி, (சி-8167) யாழ்ப்பாணம்.


03. நிர்வாக அறிக்கை சமர்ப்பித்தல்

04. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உரை.

05. பணிப்பாளர் சபைஉறுப்பினர்தெரிவு

06. நன்றியுரை

தவறாது சமுகந்தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

செயலாளர்
புங்—நயி பல நோ. கூ. சங்கம்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: இக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல்கள் கிடைக்கப் பெறாதவர்கள் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

16-12-1993. (சி-8155)

## அறிவித்தல்

### 01. உழவு இயந்திரம் தேவை

நல்ல நிலையில் உள்ள நாலு சில்லு உழவு இயந்திரத்தை விற்பனை செய்ய விரும்பும் உரிமையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 02. இழுவைப்பெட்டி

நாலு சில்லு உழவு இயந்திரத்துடன் இழுக்கக் கூடிய இழுவைப்பெட்டி தேவை. உரிமையாளரிடம் விண்ணப்பம் கோருகின்றோம்.

### 03. பயிற்சியாளர் தேவை

வடிகலன், கொதிகலன், மின்பிறப்பாக்கி பயிற்சியாளர்கள் தேவை. க பொ. த உயர்தர வகுப்பில் விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்தவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

### 04. போத்தல் சேகரிப்பாளர் தேவை

போத்தல் சேகரிப்பில் ஈடுபடக்கூடியவர்கள் தேவை. சம்பளம் பேசி தீர்க்கப்படும். தற்பொழுது இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எம்மிடம் பதிவு செய்து, தாம் சேகரிக்கும் அனைத்து போத்தலையும் நியாயமான விலைக்கு விற்பனை செய்யலாம்.

### 05 முந்திரிகை உற்பத்தியாளருக்கு

யாழ். மாவட்டத்தில் முந்திரிகை செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களை எமது கொத்தணியில் பதிவு செய்து கொள்ளவும். இது உற்பத்தியை கொள்வனவுசெய்வதற்கும், உறபத்தியாளரின் தேவைகளை நிறைவேற்றவும் உதவும்.

### 06. பனம்பொருள் உற்பத்தியாளருக்கு

பனம் பொருட்களை உற்பத்தி செய்யும் வடமராட்சி மகளிர் தமக்கு அண்மையில் உள்ள பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தில் தம்மை பதிவு செய்து கொள்ளவும்.

பொது முகாமையாளர்
பனை தென்னை வள அபிவிருத்தி
கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி.

திக்கம்,
அல்வாய்.
(6922)

சாவகச்சேரி. (6899)

## நினைவு கூருகின்றோம்...
### 1993-12-19

1987ஆம் ஆண்டு இதே தினத்தில், ஆவரங்கால் அம்மன் கோவிலடிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் விழுப்புண் அடைந்த நிலையில் தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய,

**அருணன்** (வீரச்சாமி அருளம்பலம் தேவதாஸ்-நீர்வேலி மத்தி-யாழ்)

1988ஆம் ஆண்டு கொடிகாமம் கச்சாய்ப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய,

**அலெக்ஸ்** (சின்னத்துரைகுலசேகரம்-கச்சாய்தெற்கு கொடிகாமம்)

மன்னாரில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கள்ளிக்கட்டைக் காட்டைச் சேர்ந்த 02 தமிழர்கள்.

யாழ்-சுழிபுரத்தில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட விக்ரோரியாக் கல்லூரி உயர் வகுப்பு மாணவர்கள்.

யாழ்-ஆனைக்கோட்டையில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பொது மகன்

1989ஆம் ஆண்டு உன்னிச்சைப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**பிரசாத்** (அமரசிங்கம் பேரின்பராசா - களுவாஞ்சிக்குடி - மட்டு)

அளவெட்டிப் பகுதியில் தேசவிரோதிகளால் கைது செய்து கொண்டு செல்லப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளர்களான மூவர்

இதேபகுதியில் தேசவிரோதிகளால் கட்டாய இராணுவ பயிற்சிக்குப் பிடித்துச் செல்கையில் தப்பியோடிய 03 இளைஞர்களின் பெற்றோர்கள்

1990ஆம் ஆண்டு கட்டுவன் குரும்பசிட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கேரனா** (ஜெகதீஸ்வரி ஜெகநாதன் -2-ம் வட்டாரம், குச்சவெளி-திருமலை)

**ஆனந்தி** (கிருஷ்ணலீலா ஐயாத்துரை - கணுக்கேணி, தண்ணீரூற்று-முள்ளியவளை)

**சுகந்தா** (வசந்தமலர் பாலச்சந்திரன் கோபால பிள்ளை - கொக்காவில் வீதி,-துணுக்காய்)

**தேசிகா** (அருள்நாயகி செபஸ்தியாம்பிள்ளை - 98, கோணாவில்-கிளிநொச்சி)

**கப்டன் சுந்தரி** (உதயலட்சுமி உருத்திராபதி - நெடியகாடு - வல்வெட்டித்துறை)

**சஜீவனா** (சாந்தினி கணபதிப்பிள்ளை - ஆலடி ஒழுங்கை, மல்லாகம் - யாழ்)

**ஜெனோவா** (நெக்சியா ஜோசினி பிலிப் -193-/3, கடற்கரை வீதி, பாஷையூர் யாழ்,)

**நிரஞ்சனா** (பாக்கியதேவி குஞ்சுத்தம்பி - நாகர் கோவில் கிழக்கு-வடமராட்சி கிழக்கு)

மாங்குளம் சிறிலங்கா இராணுவ முகாம் இடிபாடுகள் பக்கமாகச் சென்றபோது மிதிவெடியில் சிக்கி கால் துண்டிக்கப்பட்ட நிலையில் சாவெய்திய தமிழ்ப்பொதுமகன்

இராணுவ முகாமுக்கு கையொப்பமிடச் சென்று காணாமல் போன மட்டு - புறநகரைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு ஆ. க வெ. நடவடிக்கையின் போது விழுப்புண் அடைந்திருந்து சிகிச்சை பெற்று வரும் போது வீரச்சாவெய்திய,

**சுஜே / சுஜி** (பானுமதி பெருமாள் - இல: 58, கல்லூரி வீதி, காங்கேசன்துறை - யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

சி-8163)

யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

சரியான நேரத்தில் சரியான இடத்தில் சரியான ஆள் சரியானதை சரியான வழியில் செய்வதே திறமையென்பது.

- கலீல் கிப்ரன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 19-12-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

த. பெ. எண் - 05


## தலைவரையே சாரும்!

"எமது ஆயுதப் போராட்ட வடிவம் இன்று என்றுமில்லாதவாறு பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. கெரில்லாப் போர் முனையில் சிறிய அளவினதான தாக்குதல்களை நடத்தி வந்த நாம் இன்று பெரிய அளவில் பாரிய படைத்தளங்களைத் தாக்கி அழிக்கும் சக்தி பெற்றவர்களாக முன்னேற்றம் அடைந்துள்ளோம். இவ் அபாரமான வளர்ச்சிக்கு வேவுப் பிரிவினரின் பங்கு முக்கியமானதாகும்.'' இவ்வாறாக, தலைவர் பிரபாகரன் விடுதலைப் புலிகளின் இராணுவ சாதனைகளுக்கு காரணமாகவுள்ள வேவுப் பிரிவினர் குறித்துப் பாராட்டியதோடு, அவர்களுக்கு பரிசில்களும் வழங்கிக் கௌரவித்தும் உள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவ வலிமை இன்று உலகமே அறிந்ததொன்று. இன்று உலகிலுள்ள விடுதலைக்காக ஆயுதப் போராட்டம் நடத்தும் இயக்கங்களில் வலிமையானதும், செயற்பாடு மிக்கதெனவும், கட்டுக்கோப்பானது என்றும் இராணுவ விமர்சகர்களினால் வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டும் வருகின்றது. இதனை விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போரிடும் சிறிலங்கா இராணுவத்தினர் மட்டுமல்ல இரண்டு வருடங்களுக்கு மேலாக விடுதலைப் புலிகளுடன் போரிட்ட இந்தியஇராணுவத் தளபதிகளும் ஏற்றுக்கொள்கின்றனர்.

குறைந்தளவு எண்ணிக்கை கொண்ட சிறு குழுவாக ஒரு சில துப்பாக்கிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கமானது. சுமார் 15 வருட காலத்திற்குள் ஒரு பெரும் சக்தியாக நவீன படைக்கலங்களைக் கொண்ட பல படைப்பிரிவுகளாகஇன்று உருவாகியுள்ளது. விடுதலைப் புலிகளின் இராணுவ ஆற்றலுக்கு 1983ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடத்தப்பட்ட கண்ணிவெடி தாக்குதலில் இருந்து பூநகரியில் இடம்பெற்ற கூட்டுப் படைத்தளம் தகர்ப்பு வரை ஒரு மிக நீண்ட பட்டியலே சாட்சியமாகவுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவ சாதனைகள் மட்டுமல்ல, அதன் அமைப்பு முறையே உலகம் வியக்கும் வண்ணம் உருவாக்கப் பட்டுள்ளது.

# லண்டனில் இருந்து அனுப்பப்பட்ட ராஜ தந்திரப் பொதி மர்ம மறைவு!

## ரகசிய ஆவணங்கள் இருந்தனவாம்

(கொழும்பு)

லண்டனிலுள்ள சிறிலங்காத் தூதுவரகத்திலிருந்து ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட ''ராஜதந்திரப் பொதி'' காணாமல்போயிருப்பதாகத் தெரியவந்துள்ளது

கடந்த டிசம்பர் மூன்றாம் திகதியன்று லண்டனிலிருந்து ராஜதந்திர சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரி ஒருவர் பற்றிய முக்கிய இரகசிய விடயங்கள் அடங்கிய பொதி ஒன்று வழமையான விமான சேவை மூலம் கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனினும், கடந்த பதினொராம்திகதி வரையில் இப்பொதி ஜனாதிபதி செயலகத்திற்கு கிடைக்கவில்லையென வெளிநாட்டு சேவையிலுள்ள மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வழமையாக பொதிகள் அனுப்பப்படும் விமான சேவை அலுவலகத்திற்கு தாமே நேரில் சென்று இப்பொதியை ஒப்படைத்த போதும், அப்பொதி உரிய இடத்திற்கு உரிய காலத்தில் போய்ச் சேராததால் லண்டனிலுள்ள சிறிலங்காத் தூதுவர் ஜெனரல் சிறில் ரணதுங்க மிகவும் கோபமடைந்துள்ளாராம் லண்டன் தூதுவரகத்தில் நிலவும் அதிகார இழுபறிகளே இதற்கு காரணம் எனவும் இத்தகைய சம்பவங்கள் முன்னரும் நிகழ்ந்திருப்பதாகவும் மேலும் கூறப்படுகின்றது.

இதேவேளை கொழும்பிலுள்ள ஏயர்லங்கா அதிகாரிகள் லண்டன் தூதுவரகத்திலிருந்து சில பொருட்கள் வந்திருக்கின்றன. ஆனால் குறிப்பிட்ட 'ராஜதந்திரப் பொதியும்' அதற்குள் இருக்கின்றதா என்பதை உறுதிப்படுத்த முடியாது என்று கூறியுள்ளனர்.

## உல்லாசப் பயணிகள் வருகையில் வீழ்ச்சி

(கொழும்பு)

சிறிலங்காவிற்கு கடந்த ஆறுமாதங்களில் உல்லாச பயணிகளின் தொகை வெகுவாக குறைந்துள்ளதாக உல்லாச பயணிகள் சபை தெரிவிக்கின்றது.

கடந்த வருடம் இதே காலப்பகுதியுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது பத்து வீதத்தினர் இவ்வருடம் குறைவாக வந்துள்ளதாகவும், ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கொலை செய்யப்பட்டதை தொடர்ந்து இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

## காங்.சீமெந்து ஆலை மூடுவதை மறுபரிசீலனை செய்யவும்

### தொழிற்சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மூடுவதற்கு அமைச்சரவை எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சீமெந்து கூட்டுத்தாபன பொதுத் தொழிலாளர் யூனியன் கோரிக்கை விடுத்துள்ளது.

வீடமைப்பு துறை அமைச்சரும், ஐ தே கவின் செயலாளருமான சிறிசேன குரேயிடம் இந்த யூனியன் சமர்ப்பித்துள்ள மகஜர் ஒன்றில் மேலும் இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின், புத்தளம் சீமெந்து ஆலை, றுகுணு சீமெந்து ஆலை என்பன ஏற்கனவே பொதுக் கம்பனிகளாக மாற்றப்பட்டுள்ள போதும் காங்கேசன் துறை சீமெந்து ஆலை தொடர்ந்தும் அரசாங்கக் கம்பனியாகவே உள்ளது. எனவே அரசாங்கமே தொழில் வழங்குநராக இருக்கும் 816 தொழிற்சாலை ஊழியர்களுக்கான கடமைப் பொறுப்பை அரசாங்கம் பூரணமாக நிறைவேற்ற வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## உயர் அதிகாரிகள்தான் லஞ்சம் பெறுவதில் முன்னணி

(கொழும்பு)

லஞ்சம் வாங்குவதில் அரசாங்கத் துறையின் உயர் அதிகாரிகளே, சிறிய உத்தியோகத்தர்களை விட முன்னணியில் இருப்பதாக லஞ்ச ஒழிப்பு ஆணையாளர் திருமதி நெலும் கமகே கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஒரு கொலை வழக்கு சந்தேக நபரின் வாக்கு மூலப்பிரதியை பெற்றுக் கொடுப்பதற்காக ஒரு பிரதேச செயலாளர் 15,000 ரூபாவைக் கோரிப் பெற்றுக் கொள்ளும் போது பிடிபட்டதாகவும் தெரிவித்தார்.

## தரிசுக் காணி வழங்கல்

காணியற்ற விவசாயிகளை பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்துவதன் ஊடாக உற்பத்தியினை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் வவுனியாக் கோட்டத்திலே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக் குழுக்களூடாக தரிசுக்காணிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன்தொடர் நடவடிக்கையாக நையினாமடு வட்டத்திலும், பூவரசங்குளம் வட்டத்திலும், ஓமந்தை வட்டத்திலும் பயிர்ச்செய்கைக்கென காணிகள் இக்கால போகத்திற்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருவெம்பாவை

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு சிறி நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் ஒன்பது தினங்கள் திருவெம்பாவை பூசை நடைபெற இருக்கிறது.

(21)

## விநாயகர் சஷ்டி

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் சிறிநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை விநாயக சஷ்டிவிரத பூசை சிறப்பாக நடைபெறும்.

(21)

பருத்தித்துறை துறைமுகத்தில்

## பொருள்களை இறக்க மோட்டார் படகுகள்

(வடமராட்சி)

பருத்தித்துறையில் கப்பலில் இருந்து பொருள்களைத் துரிதமாக இறக்குவதற்கு வசதியாக மோட்டார் படகுகளை பயன் படுத்த ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

இத்தகைய நடவடிக்கை மூலம் கூடிய பொருள்களை இறக்க முடியும் எனவும் எனினும் இவ்விடயம் குறித்து அதிகாரிகள் முடிவெதனையும் மேற்கொள்ளவில்லை எனவும் தெரியவருகிறது.

இதேவேளை பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்களை இறக்க வழங்கப்பட்டுள்ள இரு இழுவைப் படகுகளையும் கொண்டுவருவதற்கு சீரற்ற கப்பற்சேவை காரணமாக அமைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

(யோ)

## கிராம சேவகர் நியமனம் வழங்குவதில் இழுபறி

(நமது நிருபர்)

கிராமசேவகர் நியமனங்களுக்கு பொலிஸ் அறிக்கை இன்மையால் அதற்கு பதிலாக ஒப்பந்த அடிப்படையில் அந்நியமனங்கள் வழங்குவது தொடர்பாக ஆராயப்படுவதாக அரச அதிபர் தெரிவித்தார்.

கிராமசேவகர் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு பின் நேர் முகப் பரீட்சையும் முடிந்து சம்பந்தப்பட்டவர்களை நியமனம் செய்ய பொலிஸ் அறிக்கை தேவையென அரசாங்கம் அறிவித்ததை அடுத்து அந்நியமனங்கள் இழுபறி நிலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது

(சி)

மாணவர் உணவு முத்திரைக்கான

## கூட்டுறவுசங்கங்களின்பணம் அடுத்த வருடம் கிடைக்கும்

(நமது நிருபர்)

மாணவ உணவு முத்திரைக்கு உணவுப்பொருள் வழங்கியமையால் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு செயலக சமூகசேவை பகுதியால் கொடுக்கப்பட வேண்டிய பணம் அடுத்த வருடம் வழங்கப்படும். திறைசேரியில் பணமின்மையாலேயே இப்பணத்தை உடனடியாக வழங்க முடியாமல் இருக்கிறது என அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மாணவ உணவு முத்திரைக்கு பொருள்கள் வழங்கியதால் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு செயலக சமூகசேவை பகுதியால் வழங்கப்படவேண்டிய பணத்தை உடனடியாக வழங்கவேண்டும், அப்பணத்தை உடனடியாக செலுத்த முடியாதாயின் செயலக புனர்வாழ்வு பகுதியில் தங்களுக்கு கடனுக்கு உணவுப்பொருள்களை பெற்றுத்தர ஒழுங்கு செய்ய வேண்டும் எனக் கேட்டு செயலக சமூகசேவை பகுதி முன்பாக பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் மறியல் போராட்டம் நடத்தியது தெரிந்ததே. அரச அதிபர் வரும் வரை மறியல் போராட்டத்தை கைவிடுமாறு மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டதற்கிணங்க இப்போராட்டம் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(சி) (க)

## சுதந்திரக்கட்சியில் சேர்ந்தார்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உதவிச் செயலாளருமான சமரவீர வீரவன்னி சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்து கொண்டுள்ளார்.

ஊவா மாகாண சபையின் அங்கத்தவரான இவர் சுதந்திரக்கட்சியின் வியலுவ தொகுதிக்கான அமைப்பாளராக, கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று உலகமே அறிந்ததொன்று. இன்று உலகிலுள்ள விடுதலைக்காக ஆயுதப் போராட்டம் நடத்தும் இயக்கங்களில் வலிமையானதும், செயற்பாடு மிக்கதெனவும், கட்டுக்கோப்பானது என்றும் இராணுவ விமர்சகர்களினால் வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டும் வருகின்றது. இதனை விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போரிடும் சிறிலங்கா இராணுவத்தினர் மட்டுமல்ல இரண்டு வருடங்களுக்கு மேலாக விடுதலைப் புலிகளுடன் போரிட்ட இந்தியஇராணுவத் தளபதிகளும் ஏற்றுக்கொள்கின்றனர்.

குறைந்தளவு எண்ணிக்கை கொண்ட சிறு குழுவாக ஒரு சில துப்பாக்கிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கமானது. சுமார் 15 வருட காலத்திற்குள் ஒரு பெரும் சக்தியாக நவீன படைக்கலங்களைக் கொண்ட பல படைப்பிரிவுகளாகஇன்று உருவாகியுள்ளது. விடுதலைப் புலிகளின் இராணுவ ஆற்றலுக்கு 1983ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடத்தப்பட்ட கண்ணிவெடி தாக்குதலில் இருந்து பூநகரியில் இடம்பெற்ற கூட்டுப் படைத்தளம் தகர்ப்பு வரை ஒரு மிக நீண்ட பட்டியலே சாட்சியமாகவுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவ சாதனைகள் மட்டுமல்ல, அதன் அமைப்பு முறையே உலகம் வியக்கும் வண்ணம் உருவாக்கப் பட்டுள்ளது. இன்று உலகமே அதிசயிக்கும் தற்கொலைத் தாக்குதல் பிரிவையும், உலகிலுள்ள விடுதலை இயக்கங்கள் எவையும் கொண்டிராத கடற்படைப் பிரிவையும் விடுதலைப் புலிகள் கொண்டுள்ளமை அதன் பலத்தை வெளிக்காட்டும் அம்சங்களே ஆகும்.

இவ்வாறாக விடுதலைப் புலிகள் இயக்கம் பெரு வளர்ச்சி பெற்றமைக்கு போராளிகளின் அர்ப்பணிப்புக்கள் தியாகங்கள் என்பன அத்திவாரமாக இருந்தன. அதேவேளை, அதனை தமிழ் தேசிய இனத்திற்குப் பயன்பாடு உள்ளதாக உலகத் தமிழ் இனத்தின் பெரும் பாதுகாப்பு கவசமாக மாற்றிய பெருமை தலைவர் பிரபாகரனையே சாரும்.

தலைவர் பிரபாகரனின் அயராத உழைப்பும், உறுதியான இலட்சியப் பற்றும் எதற்கும் அஞ்சாத மனோ திடமும் எவ்வளவோ இன்னல்கள் மத்தியிலும் விடுதலைப்புலிகளை தலைசிறந்தெதாரு விடுதலைப் போராட்ட சக்தியாக உருவாக்கியது என்பதே உண்மை. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாடும் ஒழுங்கும் உலகப்புகழ் பெற்றதென்றால் அதன் பெருமை அதன் தலைமையைச் சென்றடைவதில் கேள்வி எதுவும் இருக்கமுடியாது.

இவ்வாறு தலைவர் பிரபாகரனால் கட்டி எழுப்பப் பட்ட இராணுவ வலிமையே இன்று உலகிலுள்ள தமிழ் மக்களின் பாதுகாப்புக் கவசமாக மாறியுள்ளது. இதன் மூலம் உலகத் தமிழ் இனம் இன்று தலைநிமிர்ந்து நடக்கின்றது' தமிழ் இனத்தின் ஆற்றலுக்குப் பெருமை சேர்க்கின்றது.

இது குறித்து அண்மையில், பூநகரி வெற்றி விழாவில் பேசிய விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி பொட்டு அம்மான் ''இன்று புலிகளின் இராணுவ ரீதியான வளர்ச்சி என்பது ஒட்டுமொத்தமாக தமிழ்இனத்தின் பாதுகாப்பு வளர்ச்சியின் புதிய பரிணாமம் ஆகும். இன்று எமது தலைவர் கட்டிஎழுப்பியது என்னவென்றால் எமது இனம தன்னந்தனியே தங்கி நிற்கக் கூடிய ஒரு வீரமிக்க இனமாக்கியுள்ளமைதான்'' எனக் குறிப்பிட்டார். பொட்டு அம்மானின் இக் கூற்றானது முற்றிலும் சரியானதாகும். தமிழரின் கவசமாகவே தலைவர் பிரபாகரன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை உருவாக்கியுள்ளார்.

அதாவது, உலகத்தமிழினம் சுயகௌரவத்துடனும் பாதுகாப்புடனும் தனது காலில் தலைநிமிர்ந்து நிற்கக் கூடிய வலிமையை / ஆற்றலை பெற்றுக்கொடுத்த பெருமை தலைவர் பிரபாகரனையே சாரும்.

---

...முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சீமெந்து கூட்டுத்தாபன பொதுத் தொழிலாளர் யூனியன் கோரிக்கை விடுத்துள்ளது.

வீடமைப்பு துறை அமைச்சரும், ஐ தே கவின் செயலாளருமான சிறிசேன குரேயிடம் இந்த யூனியன் சமர்ப்பித்துள்ள மகஜர் ஒன்றில் மேலும் இலங்கை சீமெந்து ...ளாக மாற்றப்பட்டுள்ள போதும் காங்கேசன் துறை சீமெந்து ஆலை தொடர்ந்தும் அரசாங்கக் கம்பனியாகவே உள்ளது. எனவே அரசாங்கமே தொழில் வழங்குநராக இருக்கும் 816 தொழிற்சாலை ஊழியர்களுக்கான கடமைப் பொறுப்பை அரசாங்கம் பூரணமாக நிறைவேற்ற வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

...யாக நையினாமடு வட்டத்திலும், பூவரசங்குளம் வட்டத்திலும், ஒமந்தை வட்டத்திலும் பயிர்ச்செய்கைக்கென காணிகள் இக்கால போகத்திற்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருவெம்பாவை

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு சிறி நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் ஒன்பது தினங்கள் திருவெம்பாவை பூசை நடைபெற இருக்கிறது. (21)

## விநாயகர் சஷ்டி

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் சிறிநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை விநாயக சஷ்டிவிரத பூசை சிறப்பாக நடைபெறும். (21)

...கொடுக்கப்பட வேண்டிய பணம் அடுத்த வருடம் வழங்கப்படும். திறைசேரியில் பணமின்மையாலேயே இப்பணத்தை உடனடியாக வழங்க முடியாமல் இருக்கிறது என அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மாணவ உணவு முத்திரைக்கு பொருள்கள் வழங்கியதால் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு செயலக சமூகசேவை பகுதியால் வழங்கப்பட வேண்டிய பணத்தை உடனடியாக வழங்கவேண்டும், அப்பணத்தை உடனடியாக செலுத்த முடியாதாயின் செயலக புனர்வாழ்வு பகுதியில் தங்களுக்கு கடனுக்கு உணவுப்பொருள்களை பெற்றுத்தர ஒழுங்கு செய்ய வேண்டும் எனக் கேட்டு செயலக சமூகசேவை பகுதி முன்பாக பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் ...

...இப்போராட்டம் கைவிடப் பட்டது குறிப்பிடத்தக்கது. (சி) (க)

## சுதந்திரக்கட்சியில் சேர்ந்தார்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உதவிச் செயலாளருமான சமரவீர வீரவன்னி சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்து கொண்டுள்ளார்.

ஊவா மாகாண சபையின் அங்கத்தவரான இவர் சுதந்திரக்கட்சியின் வியலுவ தொகுதிக்கான அமைப்பாளராக, கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## உயர் அதிகாரிகள்தான் லஞ்சம் பெறுவதில் முன்னணி

(கொழும்பு)

லஞ்சம் வாங்குவதில் அரசாங்கத் துறையின் உயர் அதிகாரிகளே, சிறிய உத்தியோகத்தர்களை விட முன்னணியில் இருப்பதாக லஞ்ச ஒழிப்பு ஆணையாளர் திருமதி நெலும் கமகே கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஒரு கொலை வழக்கு சந்தேக நபரின் வாக்கு மூலப்பிரதியை பெற்றுக் கொடுப்பதற்காக ஒரு பிரதேச செயலாளர் 15,000 ரூபாவைக் கோரிப் பெற்றுக் கொள்ளும் போது பிடிபட்டதாகவும் தெரிவித்தார்.

---

## கட்சித் தலைவர்களுடன் சபாநாயகர் தனித்தனியே பேச்சு

(டில்லி)

உத்தரப்பிரதேச சட்டப் பேரவை சபாநாயகர் தனிராம் வர்மா நேற்று தனது அறையில் பல்வேறு கட்சிகளின் தலைவர்களையும் அழைத்து தனித்தனியே பேச்சு நடத்தியுள்ளார்.

சட்டப் பேரவைக்கூட்டங்கள் ஒழுங்காகவும், அமைதியாகவும் நடைபெற பல்வேறு தலைவர்களினதும் ஒத்துழைப்பை அவர் நாடினார். முதல்வர் முலாயம் சிங்யாதவ், பாரதீய ஜனதாக்கட்சியின் துணைத்தலைவர் ஜிதேந்திர குமார், காங்கிரஸ் கட்சியின் பிரமோத்திவாரி ஆகியோரும் இவ்வாறு அழைக்கப்பட்டவர்களில் அடங்குவர்.

## சீன இராணுவ அதிகாரிகள் குழு புதுடில்லிக்கு விஜயம்

(டில்லி)

சீனாவிலிருந்து உயர்நிலை இராணுவ பிரதிநிதிகள் குழு ஒன்று புதுடில்லிக்கு வருகை தந்துள்ளது. சீனாவின்மக்கள் விடுதலை இராணுவத்தின் துணைத்தளபதி குயின்.சி. தலைமையில் ஆறுபேர் கொண்ட இக் குழு வந்துள்ளது. புதுடில்லியில் முப்படைத் தளபதிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவதுடன் இராணுவ பயிற்சிக் கல்லூரிகளையும் சென்று பார்வையிடவுள்ளது. பாதுகாப்பு இணை அமைச்சர், மல்லிகா அர்ஜுனையும் இக் குழுவினர் சந்திக்க உள்ளனர். முப்பது ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் சீனாவின் இராணுவ அதிகாரிகள் புதுடில்லிவருவது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜிப்ரில், அபூநிடாலுக்கு கடாபி பகிரங்க அழைப்பு

(திரிப்போலி)

மேற்குலக குண்டுத் தாக்குதல்கள் மூலம் அதிரவைத்த அஹமட் ஜிப்ரில், மற்றும் அபூநிடால் போன்றோரை லிபியத் தலைநகர் திரிப்போலிக்கு வரும்படி லிபியத் தலைவர் கேணல் கடாபி அழைப்பு விடுத்துள்ளார்.

திரிப்போலியிலிருந்து 25 மைல் தொலைவிலுள்ள அணிஷிநகரில் சுமார் 20,000 மக்கள் முன்னிலையில் உரை நிகழ்த்திய கடாபி இந்த அழைப்பை பகிரங்கமாக விடுத்தார்.

லிபியா மீதான ஐ.நாவின் பொருளாதாரத் தடை கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருவதையடுத்து ஐ.நா. பாதுகாப்பு சபையை கண்டித்துள்ள லிபியத்தலைவர் இந்த அழைப்பை விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## உ. பி. சட்டப்பேரவையில் கைகலப்பு அமைச்சர்கள் உட்பட 25 பேர் காயம்

(டில்லி)

உத்தரப் பிரதேச சட்டப் பேரவை, பேரவைஉறுப்பினர்களுக்கிடையே முன்புஎப்போதும் நிகழ்ந்திராத அளவுக்கு கடுமையான மோதல்களும், கைகலப்புகளும் ஏற்பட்டுள்ளன. இந்த மோதல்களால் இரு அமைச்சர்கள் உட்பட சுமார் 25 பேருக்கு கடும் காயங்கள் ஏற்பட்டன.

சட்டப்பேரவை வியாழன் அன்று மாநிலத் தலைநகர் லக்னோவில் கூடிய போது சபாநாயகர் தனிராம் வர்மா ஆளுநரின் உரையை வாசிக்கத் தொடங்கியதையடுத்து பாரதீய ஜனதாக் கட்சியினர் கூச்சலிட ஆரம்பித்தனர். கட்சியின் தலைவர் கல்யாண் சிங்கை காவலில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று கோரியே இவர்கள் கூச்சல் இட்டனர். அவையின் மையப்பகுதிக்கு விரைந்த அவர்கள் கோப்புகளையும், ஆவணங்களையும் வீசி எறியத் தொடங்கியதையடுத்து சபாநாயகர்சபையை ஒத்திவைத்தார் சபாநாயகரின் இந்த அறிவிப்பு வெளியானதும் ஆளும் பகுஜன் சமாஜ் சமாஜவாதி ஜனதா கூட்டணியின் உறுப்பினர்களுக்கும், பாரதீய ஜனதாவின் உறுப்பினர்களுக்கும்இடையே மோதலும் கைகலப்பும் ஏற்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சபாநாயகர் இதனை வெட்கத்துக்குரிய நிகழ்ச்சி என்று வர்ணித்ததுடன் இச்சம்பவம் பற்றி விசாரிக்க குழு ஒன்று நியமிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை ஆளுநர் மோதிலால்வோராவை சந்திக்க பாரதீய ஜனதாக் கட்சியின் தூதுக்குழு ஒன்று மாநில அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது.

## ஆதரவு வீழ்ச்சி

(அம்மான்)

காஸாவிலும் ஜெரிகோவிலும் சுயாட்சி ஏற்படுத்தும் இஸ்ரேல்—பி.எல் ஓ. உடன்படிக்கைக்கு பாலஸ்தீனியர்களின் ஆதரவு வீழ்ச்சியடைந்து வருகிறது.

## அணு ஆயுத தயாரிப்பில் ஈராக் ஈடுபட்டுள்ளதாம்

(பக்தாத்)

அணு ஆயுதத் தயாரிப்பில் ஈராக் ஈடுபட்டுள்ளதா என்பதைக் கண்டறியும் முகமாக பக்தாத்திற்கு மேலே உலங்கு வானூர்தியில் பறந்த ஐ.நா நிபுணர்கள் காமா கதிர்கள் வீசுவதை உணர்ந்துள்ளனர்.

இவ்வாறு விமானம் பறப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த ஈராக் இப்போது எதிர்ப்பு எதையும் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது ஈராக்கின் அணுவாயுத உற்பத்தி பெருமளவில் குறைக்கப்பட்டிருக்கின்ற போதும், ஆனாலும் மக்களுக்கு பெரும்அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தயாரிப்பதில் ஈராக் ஈடுபட்டிருக்கிறது எனக் கூறப்படுகிறது.

## முன்னாள் லிபிய அமைச்சர் கெய்ரோவில் கடத்தப்பட்டார்

(லண்டன்)

லிபியாவின் முன்னாள் வெளிநாட்டமைச்சர் மாசூர் கிக்கியா எகிப்துவில் வைத்து காணாமற் போயுள்ளார். 1970 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் வெளிநாட்டமைச்சராக இருந்த அவர் பின்னர் ஐரோப்பாவிற்கு நாடு கடத்தப்பட்டிருந்தார். எகிப்தில் நடத்தப்பட இருந்த மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக கெய்ரோவிற்கு வந்த இவர் கடந்த பத்தாம் திகதி முதல் காணாமற் போயிருப்பதாகக் கூறப்படுகிறது.

லிபிய அரசாங்கம் அவரைக் கடத்திச் சென்றிருக்கலாம் என்று நம்புவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறியுள்ளன.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்குரிய

# 3 கோடி பெறுமதியான உபகரணம் தென்பகுதிக்கு அனுப்பப்பட்டது

(கொழும்பு)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு உரிய மூன்று கோடி ரூபா பெறுமதியான உபகரணங்கள் சிங்களப் பகுதி ஒன்றிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நீண்டகாலத்திற்கு முன்பாகவே கொழும்பிலிருந்த இந்த உபகரணங்கள் யாவும் உலகவங்கியின் உதவியுடன் யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கென வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

தற்போது இந்த உபகரணங்கள் யாவும் அசலக்கதொகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் இந்த உபகரணங்கள் வைக்கப்பட்டிருந்த வேளை, 'பாதுகாப்பு' நிலைமைகளை காரணங்காட்டி, இவற்றை அனுப்பிவைப்பதில் தாமதம் காட்டப்பட்டது

பின்னர் மட்டக்களப்பிற்கு அனுப்பிவைக்கப்பட உள்ளதாக அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தற்போது இந்த மூன்று கோடி ரூபா பெறுமதியான உபகரணங்கள் யாவும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு அனுப்பிவைக்காமல், உலக வங்கியின் நோக்கத்தை மீறி சிங்களப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு சமூகசேவை பிரிவிற்கு

# வெள்ள நிலைமை குறித்து அரச அதிபர் அறிவிப்பு

யாழ். குடாநாட்டில் தொடர்ந்து இரு நாட்கள் பெய்த கடும் மழையால் பெருமளவு குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இதுகுறித்து கொழும்பு சமூக சேவை பிரிவுக்கு யாழ். அரசாங்கஅதிபர் அறிவித்துள்ளார்.

வெள்ளத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து உடனடியாக செயலகத்திற்கு யாழ். பிரதேச செயலரும், சாவகச்சேரி பிரதேச செயலருமே அறிவித்துள்ளதாக தெரிவித்த அரசாங்க அதிபர் மற்ற பிரதேச செயலர் பிரிவுகளில் ஏற்பட்ட பாதிப்புகளையும் திரட்டி வெள்ள நிவாரணம் வழங்கப்படுமென தெரிவித்தார். (சி)

நிவாரண

மணிக்குப் புறப்பட்டு பிரதான வீதி வழியாக உதவி அரசாங்க அதிபர் பணிமனையை சென்றடையவுள்ளது. இவ் ஊர்வலத்தை தென்மராட்சி - யாழ். மாவட்ட சீமெந்து கட்டடத் தொழிலாளர் சங்கம் கிளை-4 ஒழுங்கு செய்துள்ளது.

யாழ். நகரப்பகுதியில் பிரதான வடிகால் தொகுதியூடாக வெள்ளம் ஓடிக்கொண்டிருந்த போதிலும் நகரில் தேங்கியிருந்த வெள்ள மட்டம் குறையவில்லை. யாழ், போதனா மருத்துவமனையை நேற்றைய பெருவெள்ளம் சூழ்ந்து நின்றது மட்டுமன்றி மருத்துவ மனையின் நோயாளர் விடுதிகள் சிலவற்றிற்குள்ளும் வெள்ளம் புகுந்து கொண்டது. மகப்பேற்று விடுதிப் பகுதிக்குள் புகுந்து கொண்ட வெள்ளம் காரணமாக இப்பகுதியின் செயற்பாடுகளில் தடங்கல் ஏற்பட்டது. மேலும் இவ் வைத்தியசாலையின் மூன்று பகுதிகளைச் சூழவும் வெள்ளம் காணப்பட்டது. விக்ரோறியா வீதிப் பகுதி முழுவதும் மூன்று அடி வரையான வெள்ளம் தேங்கி இருந்தது.

காக உள்ள தண்ணீர்க்கான் நிரம்பிவழிந்த நிலையில் வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது.

யாழ். ஆரியகுளம் நிரம்பி வீதியால் வழிந்து கொண்டிருந்தது. நல்லூர் அரசடிவீதி. வைமன் வீதி, கோவில் வீதி, நல்லூர் பின் வீதி, சோமசுந்தரம் வீதி, அரியாலை வீதி, செம்மணி வீதி, பொம்மைவெளி, ஒட்டுமடம், கன்னாபுரம், இராமநாதன் வீதி, நந்தாவில், முலவைச்சந்தி ஆகிய பகுதிகள் உட்பட குடாநாட்டின் ஏனைய புறநகர்ப்பகுதிகள், கிராமப்புறங்கள் அனைத்திலும் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளில் தங்கியிருக்

# இராணுவ சுற்றிவளைப்பில் வீடுகள், பயிர்கள் அழிப்பு

## திருமலை கிராமங்களில் சம்பவம்

(திருமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் கதிரவெளிக்கும் வெருகலுக்குமிடையில் சிறிலங்கா இராணுவத்தினர் தரைவழியாகவும், கடல்வழியாகவும் முற்றுகையிட்டு பெரும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதன்போது பொதுமக்கள் தாக்கப்பட்டதுடன், வீடுகள், பயிர்கள் பலவும் படையினரால் நாசமாக்கப்பட்டன.

கடந்த புதனன்று காலை 6 மணியளவில் கதிரவெளிக்கும் வெருகலுக்குமிடையில் உள்ள பெரியசோலை காட்டுப்பகுதியினுள் கதிரவெளி முகாமிலிருந்து வந்த முந்நூறுக்கும் மேற்பட்ட படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர். இதே வேளை வெருகல் முகாமிலிருந்து விசைப்படகுகள் மூலம் கதிரவெளிக்கும், வெருகலுக்கும் இடையில் உள்ள கல்வெட்டுவான், கல்தீவு ஆகிய தீவுப்பகுதிகளில் தரையிறங்கிய படையினர் அப்பகுதி மக்களின் சோளம், இறுங்கு போன்ற பயிர்களை வெட்டி ஆற்றில் போட்டனர். அத்துடன் அவ் விவசாயிகளை தாக்கியதோடு அவர்களது குடிசைகளையும் தீக்கிரையாக்கினர்.

யாழ்.

கும் மேற்பட்ட குடும்பங்களும் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுமார் 640இற்கு மேற்பட்ட குடும்பங்களும் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஏனைய உதவி அரசாங்க அதிபர்கள் தமது பிரிவில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்பான அறிக்கையை நேற்று மாலை வரை யாழ் செயலகத்துக்கு சமர்ப்பிக்கவில்லை.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

18 - 12 - 93

எமது பகுதியில் உள்ள கடைசி இலக்கம்:- 11720

# ஆண்டு 5 புலமைப்பரிசில் மேலும் சில முடிவுகள்

நேற்று முன்தினம் வெளியான ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்கள் மேலும் சில கிடைத்துள்ளன.

தென்மராட்சி பிரிவுப் பாடசாலைகளில் பலமாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 12 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் இவர்களில் செல்வன் வி ஜனார்த்தன் 180 புள்ளிகளும், செல்வன் எஸ். அருணன் 173 புள்ளிகளும், செல்வி ரீ. தர்சிகா 164 புள்ளிகளும் பெற்று சித்தியடைந்துளளனர்.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் மூவர் சித்தியடைந்துள்ளனர் இவர்களில் செல்வன் நா. வைகுந்தன் 152 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார்.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் மூவர் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் என். நஜந்தா 158 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார்.

சாவகச்சேரி றிபேக்கல்லூரியில் மூன்று மாணவர் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் செல்வன் ரி. ரமேஷ் 172 புள்ளிகளையும். செல்வன் எஸ். துவாரகன் 152 புள்ளிகளையும், செல்வன் என். சஞ்சீவ் 139 புள்ளிகளையும் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

அல்லாரை மகாவித்தியாலயத்தில் இரு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

யா/ உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் இரு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் செல்வன் கே கிருபாகரன் 162 புள்ளிகளையும் செல்வன் எ. றெஜினோல்ட் 148 புள்ளிகளையும் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

மந்துவில் சிறிபாரதி மகா வித்தியாலயத்தில் ஒரு மாணவர் சித்தியடைந்துள்ளார்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ச. காமினி என்ற மாணவி ஒருவர் மட்டும் 159 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இது இவ்வாறிருக்க திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் 13 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் இவர்களில் செல்வன் வி.பிரதீபன் 183 புள்ளிகளும் செல்வன் செந்தூரன் 179 புள்ளிகளும், செல்வி இ. கிரிசாந்தினி 176 புள்ளிகளும் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் 12 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். க. கவிதா 170 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

இதேவேளை சென். ஜோன்பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் ப.பிரணவன் 186 புள்ளிகளையும், செல்வன் க. யதுநந்தன் 182 புள்ளிகளையும், செல்வன் ரி. சஞ்சயன் 181 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

புங்குடுதீவு கணேச மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் த. மயூரன் 163 புள்ளிகளையும், செல்வன் இ. சிவசத்தியன் 148 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

வங்காள

செல்லலாமென கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது

இன்று கிழக்கு கரையை அண்மிக்கும் இந்த தாழமுக்கம் புயலாக மாறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக வடக்கு கிழக்கு பகுதிகளில் மழை பெய்யலாம் என அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது. கிழக்கு தென்கிழக்கு கரைக்கு அப்பாலுள்ள கடற்பகுதியில் இடையிடையே மழை பெய்யும் கடுங் காற்றும் வீசும் எனவும், கடல் கொந்தளிப்பாக இருக்கும்எனவும் இதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

முப்படை

பல ஆயிரக்கணக்கான படையினர் இராணுவத்தை

தோல்வியை

பாதுகாப்பு வேலிகளிலுள்ள பதுங்கு குழிகள் பாதுகாப்பான இடங்களல்ல என்று இராணுவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இராணுவத்தின் பாதுகாப்பு அரண்கள் பலவீனமானவை என்பதினை உணர்ந்த இராணுவ அதிகாரிகளும், சிப்பாய்களும் பாதுகாப்பு அரண்களைவிட்டு விலகி அப்பால் நிற்கின்றனர்.

புலிகள் ஊடுருவி உள்ளார்கள் என்று புலனாய்வு அறிக்கை கிடைத்தும் பூநகரி முகாம் அதன் பாதுகாப்பு நிலைகளைப் பலப்படுத்திக் கொள்ளவில்லை.

ரி-55 ரகயுத்த டாங்கிகள் இரண்டும் பூநகரியில் என்ன செய்தன? டாங்கிகள் தாக்குதலுக்கு உகந்தவை என்றாலும் பூநகரியில் டாங்கிகள் பயனளிக்கவில்லை. டாங்கிகள் ஒரு போலியான பாதுகாப்பு உணர்வை இராணுவத்தினருக்குக் கொடுத்திருந்தது. இதனால் 'யாழ் தேவி' நடவடிக்கையில் டாங்கிகள் தாக்கப்பட்டபோது இராணுவத்தினர் குழப்பமடைந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒட்டுமொத்தமாக மனோதிடத்தையும், ஒழுங்கு கட்டுப்பாட்டையும் இழந்துள்ள இராணுவம் ஒன்றின் பின் ஒன்றாக ஏற்படும் திடீர் மாறுதல்களை எவ்வாறு தாக்குப் பிடித்துக் கொள்ள முடியும். இராணுவத்திலுள்ள உயர் மட்டத்தினர் ஒன்று சேர்ந்து ஒரு திட்டத்தின் அடிப்படையில் செயற்படாது இருக்கும் பட்சத்தில் பூநகரி அழிவுகள் போன்ற அழிவுகள் இராணுவத்துக்கு திரும்பவும் ஏற்படும்.

இவ்வாறு அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

# கப்பல் பயணிகள் கவனத்திற்கு

'வாதுவ' கப்பலில் கொழும்பிற்குச்செல்ல பதிவுசெய்தவர்கள் இன்று மாலை 3 மணிக்கு முன்னதாக பருத்தித்துறை இறங்குதுறைக்கு சமுகம் தருமாறு யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. பத்மநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இக் கப்பல் காங்கேசன் துறையில் இருந்து இன்று பருத்தித்துறைக்கு வந்துசேரவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (பா)

மாகாணசபைகள்

கிய தேசிய முன்னணியினரை தம்முடன் இணைத்துக் கொள்வதன்மூலம் அடுத்து வரும் தேர்தற்காலத்தில் சகல மாகாண சபைகளையும் தம்வசம் வைத்திருக்கலாம் என ஐ. தே. க. நம்புகிறது.

இதேவேளை எதிரணியினரின் கூட்டுக் கட்சிகளைச் சார்ந்த மாகாணசபை உறுப்பினர்களைத் தம்வசப்படுத்தி மேல்மாகாணசபையின் ஆட்சியைக் கவிழ்க்கும் நடவடிக்கையிலும் டி. பி. விஜேதுங்க ஈடுபட்டு வருகிறார் எனவும் சொலலப்படுகிறது.

இலங்கை

விக்டர் ஐவன் பி. பீ. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இம் மாகாணசபை. உறுப்பினர் கடத்தப்பட்டதன் மூலம் இம் மாகாண சபையின் ஆளும்கட்சி பெரும்பான்மை இழந்து விட்டது. எனவே வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பின் போது ஆட்சி கவிழ்வது திண்ணம் இதன் மூலம் தென்மாகாணசபை ஆட்சியைக் கைப்பற்ற ஐக்கிய தேசியக் கட்சி முயல்கின்றது என ஐவன் மேலும் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்கள்

## கதிரவேலு - அபிமன்னன் (மணியம்)

புங்குடுதீவைச் சேர்ந்தவரும், அரியாலையில் வசித்தவருமாகிய கதிரவேலு அபிமன்னன் (மணியம்) காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று (19-12-93) காலை 10 மணியளவில் சித்துப்பாத்தி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

(6927) மனைவி ராசம்மா

## கணபதிப்பிள்ளை முதலித்தம்பி

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்தவரும்

கடந்த புதனன்று காலை 6 மணியளவில் கதிரவெளிக்கும் வெருகலுக்குமிடையில் உள்ள பெரியசோலை காட்டுப்பகுதியினுள் கதிரவெளி முகாமிலிருந்து வந்த முந்நூறுக்கும் மேற்பட்ட புடையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர். இதே வேளை வெருகல் முகாமிலிருந்து விசைப்படகுகள் மூலம் கதிரவெளிக்கும், வெருகலுக்கும் இடையில் உள்ள கல்

கும் மேற்பட்ட குடும்பங்களும் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுமார் 640இற்கு மேற்பட்ட குடும்பங்களும் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஏனைய உதவி அரசாங்க அதிபர்கள் தமது பிரிவில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்பான அறிக்கையை நேற்று மாலை வரை யாழ் செயலகத்துக்கு சமர்ப்பிக்கவில்லை.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 18 - 12 - 93

**எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11720**

**வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்**

**41-7841, 26-2201, 24-3461, 27-9707, 43-6974 26-3162, 27-4628, 27-2511, 26-5862.**

**வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம் இல்லை.**

# ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்

5-12-1922

மறைவு

29-12-1992

## அமரர் மு. ஐயாத்துரை

### திதி 19-12-93

அன்பின் திருவுருவாய் அறிவில் ஆசானாய்
பண்பில் சிறந்தவராய் பாசத்தின் பிறப்பிடமாய்
வாழ்ந்த எம் அன்புத் தந்தையே
ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லையே எம்மனது;
ஆண்டவனின் பாதத்தில்தான்
ஆறுதலைத் தேடுகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடையஆண்டவனை
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவால் துயருறும்

பிளாக் றோட், மனைவி, மக்கள், மருமக்கள்,
சங்கானை. பேரப்பிள்ளைகள்.

(6926)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யூடாக வெள்ளம் ஓடிக் கொண்டிருந்த போதிலும் நகரில் தேங்கியிருந்த வெள்ள மட்டம் குறையவில்லை. யாழ், போதனா மருத்துவ மனையை நேற்றைய பெரு வெள்ளம் சூழ்ந்து நின்றது மட்டுமன்றி மருத்துவ மனையின் நோயாளர் விடுதிகள் சிலவற்றிற்குள்ளும் வெள்ளம் புகுந்து கொண்டது. மகப்பேற்று விடுதிப் பகுதிக்குள் புகுந்து கொண்ட வெள்ளம் காரணமாக இப்பகுதியின் செயற்பாடுகளில் தடங்கல் ஏற்பட்டது. மேலும் இவ் வைத்தியசாலையின் மூன்று பகுதிகளைச் சூழவும் வெள்ளம் காணப்பட்டது. விக்ரோறியா வீதிப் பகுதி முழுவதும் மூன்று அடி வரையான வெள்ளம் தேங்கி இருந்தது. வைத்தியசாலைக்கு அரு

## புதிய விஞ்ஞானபீட மாணவர்களுக்கான வகுப்புக்கள் 1992/93 கல்வியாண்டு

மேற்குறித்த மாணவர்களுக்கு, 20-12-1993 இல் ஆரம்பமாகவிருந்த வகுப்புகள் பிற்போடப்பட்டுள்ளன. ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர்

(சி-8165)

ள்ளனர். இவர்களில் செல்வன் கே கிருபாகரன் 162

காக உள்ள தண்ணீர்க்கான் நிரம்பிவழிந்த நிலையில் வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது.

யாழ். ஆரியகுளம் நிரம்பி வீதியால் வழிந்து கொண்டிருந்தது. நல்லூர் அரசடிவீதி. வைமன் வீதி, கோவில் வீதி, நல்லூர் பின் வீதி, சோமசுந்தரம் வீதி, அரியாலை வீதி, செம்மணி வீதி பொம்மை வெளி, ஒட்டுமடம், கன்னாபுரம், இராமநாதன் வீதி, நந்தாவில், முலவைச்சந்தி ஆகிய பகுதிகள் உட்பட குடாநாட்டின் ஏனைய புறநகர்ப் பகுதிகள், கிராமப்புறங்கள் அனைத்திலும் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளில் தங்யிருக்கும் இடம் பெயர்ந்தோர் முகாம்கள் அனைத்திற்குள் வெள்ளம் புகுந்து விட்டது. இதனால் இம் மக்கள் பெரு பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். பெரிய புலம் மகாவித்தியாலயம், சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், சுபாஸ் ஹொட்டேல் ஆகியவற்றுக்குள்ளும் வெள்ளம் புகுந்துவிட்டது

யாழ் பல்கலைக்கழகபெண்கள் விடுதியின் சமயலறைக்குள்ளும், சிற்றுண்டிச்சாலைக்குள்ளும் வெள்ளம் புகுந்து விட்டது. இதனால் இங்கிருந்த பல உணவுப் பொருள்கள் சேதமடைந்துள்ளன,

கடந்த 1964ஆண்டுக்குப் பின்னர் பெய்த கடுமையான வெள்ளப்பெருக்கு இது இன்றும் தொடர்ந்தும் சடும் மழை பெய்தால் யாழ். நகரப் பகுதியில் வரும் வெள்ளம் தேங்கியிருப்பதைத் தவிர்க்க முடியாமல் இருக்கும் என்றும் யாழ். மாநகரசபை பொறியியலாளர் திரு ராமதாஸ் தெரிவித்தார்.'' (க, நி) (86) (9) (11)(ப) (சி), (22)

வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது

இன்று கிழக்கு கரையை அண்மிக்கும் இந்த தாழமுக்கம் புயலாக மாறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக வடக்கு கிழக்கு பகுதிகளில் மழை பெய்யலாம் என அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது. கிழக்கு தென்கிழக்கு கரைக்கு அப்பாலுள்ள கடற்பகுதியில் இடையிடையே மழை பெய்யும் கடுங் காற்றும் வீசும் எனவும், கடல் கொந்தளிப்பாக இருக்கும்எனவும் இதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### முப்படை

பல ஆயிரக்கணக்கான படையினர் இராணுவத்தை விட்டு ஓடிவிட்டனர். தென்னிலங்கையில் முன்பு போல் இளைஞர்கள் இராணுவத்தில்சேர குவிவது கிடையாது யுத்தமுனையில் புலிகள் தாம் கைப்பற்றிய ஏராளமான ஆயுதங்களோடு இராணுவ முகாம்களை வேட்டையாடியுள்ளனர்.

மொத்தத்தில் செயல் நோக்கில் தீவிரமான போராளிகளோடு நடக்கும் போரில் சரிந்து கொண்டிருக்கும் இராணுவத்தை பிடித்து நிமிர்த்தவே புதிய தளபதி தனது முழு ஆற்றலையும் பயன் படுத்தவேண்டிவரும் சரிந்துவரும் இராணுவத்தை இவர் சரிக்கட்டாவிடின் அவரது மதமே அவருக்கு எதிராக மட்டுமல்ல அரசுக்கெதிராகவும் கடும் பௌத்த தேசியவாதிகளால் சுட்டிக் காட்டப்படும். மொத்தத்தில் புதிய தளபதிக்கு யுத்தகளத்திலும் சரி அதற்கு வெளியேயும் சரி ஏகப்பட்ட வேலைகள் காத்துள்ளன என பிபிஸி மேலும் தெரிவித்தது.

ளது,

றது என ஐவன் மேலும் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்கள்

## கதிரவேலு - அபிமன்னன் (மணியம்)

புங்குடுதீவைச் சேர்ந்தவரும், அரியாலையில் வசித்தவருமாகிய கதிரவேலு அபிமன்னன் (மணியம்) காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று (19-12-93) காலை 10 மணியளவில் சித்துப்பாத்தி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

(6927) மனைவி ராசம்மா

## கணபதிப்பிள்ளை முதலித்தம்பி

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்தவரும் தற்போது கரந்தன் நீர்வேலியில் வசித்தவருமாகிய கணபதிப்பிள்ளை முதலித்தம்பி (18-12-93) நேற்று காலமானார். இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், தங்கரத்தினம், நல்லம்மா, இராசேந்திரம், பரமேஸ்வரி, இராஜசிங்கம், இராசம்மா, சிவபாக்கியம், செல்வராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சபாரத்தினம், அருந்தவரத்தினம் ஆகியோரினதும் பூதப்பிள்ளை, மகாலட்சுமி, மதிவதனி, ஜெகநாதன், சிவகுமார் ஆகியோரினதும் மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று(19-12-93)ஞாயிற்றுக்கிழமை மு.ப 11-00 மணியளவில் கரந்தன் நீர்வேலியில் உள்ளஇல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை அச்செழு விலங்கன் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்

''ஈஸ்வரி வாசா'' அ. பாலசிறி
கரந்தன், (பேரன்)
நீர்வேலி. (6930)

## இராமலிங்கம் சின்னத்தம்பி

(வெலிமடைச் சின்னத்தம்பி)

சித்தன்கேணியைச் சேர்ந்த இ. சின்னத்தம்பி (முன்னாள் இந்திரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர். வெலிமடை) அவர்கள் 18-12-93 சனிக்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் இரத்தினம்மாவின் அன்புக் கணவரும், ஆனந்தக் குமாரசாமி (உரிமையாளர் இந்திரா ஸ்ரோர்ஸ் மாங்குளம்), கிரியாசக்தி, காலஞ்சென்ற அருந்தவநாதன், இ.கமலாதேவி, பி.தில்லைநாயகி, ச.தேவகாரணி, சிவசுப்பிரமணியம், சண்முகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், க. நித்தியானந்தன், இராமநாதன், மறைசேர் அழகனார், சக்திதாசன், ஆ. வசந்தாதேவி, சி. விபுலாதேவி, ச. அருந்ததி ஆகியோரின் அன்பு மாமனாரும், மோகனா, ரமேஷ், வாசுகி, அரவிந்தன், மஞ்சுளா, அஜித், கஜன் சித்திரகலா, சிவசர்மிலா, சிவவத்சலா, சிவஷகிலா சுகன்யா ஆகியோரின் பேரனாருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19-12-93) நண்பகல் 12-00 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்

''இலக்சுமி வாசம்'' ஆனந்தக்குமாரசாமி
சித்தன்கேணி. (6931) (மகன்)


நத்தார் புதுவருட பண்டிகைகளை முன்னிட்டு

★ மலிவு விற்பனை ★

சகல வகையான கேக், பலரக குளிர்பான தயாரிப்பு பொருள்கள் மற்றும் பழவற்றல், பால்மா, பிஸ்கட், ரொபி, சொக்கலட்.

பாலன் பிறப்புக்காட்சிப் பொருள்கள், பிறந்தநாள், திருமண வைபவங்களுக்கு ஏற்ற பொம்மைகள், மெழுகுதிரிகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

இன்றே நாடுங்கள்

கணேஷா வர்த்தக நிலையம்

65, கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம்

(சி-8166)